(இ) ஆமெனில், இத்திட்டத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

Allotment of tractors

* 559 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of tractors, indigenous and foreign allotted to the districts of Chingleput, North Arcot and Madras during 1970–71, 1971–72 and 1972–73;

(*b*) the number actually delivered;

(*c*) whether there has been any delay in the delivery of these tractors;

(*d*) if so, the reasons therefor; and

(*e*) the action taken by the Government to expedite the allotment of these tractors ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை@ ஒன்று இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். பலராமன் : டிராக்டர்கள் ஒதுக்குவதில் வட ஆற்காடு மாவட்டத்திற்குக் குறைவாகவும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அதிகமாகவும் கொடுத்திருக்கிறார்கள். எந்த அடிப்படையில் அப்படிக் கொடுக்கப்பட்டது? ஏனென்றால் தஞ்சைக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் வடாற்காடு மாவட்டம்தான் உணவு உற்பத்தியில் அதிகம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அங்கே விவசாயிகள் டிராக்டர்கள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அதற்குப் பதில் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டிராக்டர்களைப் பொறுத்த வரையில் விவசாயிகள் எவ்வளவு கேட்கின்றார்களோ அவ்வளவையும் கூடியவரையில் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

@ 422-427-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 டிசம்பர் 1]

செங்கற்பட்டில் அதிக விவசாயிகள் கேட்டிருக்கக்கூடும். அதனால் ஒரு வேளை அதிகமாக இருக்கிறதோ என்னவோ என்றால் சொல்ல முடியவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : டிராக்டர் ஒதுக்கப்படுவதிலிருந்து பார்க்கும்பொழுது செங்கற்பட்டுக்கு அதிகமாகவும், நார்த் ஆற்காட்டுக்கு குறைவாகவும், சென்னைக்கு ஒன்றுமே இல்லாததுமாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சென்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபற்றி நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், சென்னையில் டிராக்டர் போட்டு உழுது விவசாயம் நடைபெறக்கூடிய அளவில் நிலம் இல்லாததால் சென்னைக்கு ஒதுக்குவதில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சென்னையிலே உழுது பயிர் செய்து கொண்டிருந்த இடங்களையெல்லாம் ஹவுசிங் போர்டு எடுத்துவிட்ட காரணத்தினால் பயிரிடுவதற்கு இயலாத நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : காரணம் ஏதாவது இருக்கலாம். ஆனால் தற்பொழுது சென்னை நகரத்தில் நான் பார்த்தவரையில் எங்கேயும் டிராக்டர் போட்டு உழுது விவசாயம் நடைபெறக்கூடிய இடம் காணப்படவில்லை. அப்படி ஒரு வேளை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஒரு இடத்தைச் சொல்லி, அந்த இடத்தில் டிராக்டர் போட்டு உழுது விவசாயம் செய்யக்கூடிய அளவில் விஸ்தீரணம் இருக்கிறது, அப்படிப்பட்ட நிலம் விவசாயத்திற்கு இருக்கிறது, அதற்கு டிராக்டர் வேண்டும் என்று மனு எழுதிக் கொடுத்தால் ஆவன செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : உரம் முதலியவைகள் பெறுவதற்கு கடன் வசதி செய்திருக்கிற நேரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் பல விவசாயிகள் ஆண்டுக் கணக்கில் மாஸே ஃபர்குஸான் டிராக்டர் வேண்டும் என்று பதிவு செய்து வைத்துக்கொண்டிருந்தாலும், விரைவாகக் கிடைக்கவில்லை. அந்த டிராக்டர்கள் விரைவாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாஸே ஃபெர்குஸான், இண்டர்நாஷனல் இப்படிப்பட்ட குறிப்பிட்ட டிராக்டர்கள்தான் வேண்டும் என்று விவசாயிகள் வற்புறுத்துவதன் காரணமாகத் தான் அவர்களுக்கு போதிய அளவுக்கு இதுவரையிலும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. எடுத்துக்காட்டாக சொல்ல வேண்டுமானால், டி. 25 டிராக்டர் ஏறத்தாழ இரண்டு ஆண்டு காலமாக அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் கையில் இருந்து கொண்டிருக்கிறது, எந்த விவசாயியும் எடுத்துக்கொள்ளாமல் இரண்டு ஆண்டு காலமாக கையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், குறிப்பிட்ட டிராக்டர்தான் வேண்டும் என்று சொல்லாமல் டிராக்டர் பெற வேண்டுமானால் இலகுவாகக் கொடுக்க முடியும்.

நான் இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். டிராக்டர் கண்ட்ரோல் அண்டு டிஸ்டிரிப்யூஷன் ஆர்டர் மத்திய அரசின் கையில் இருக்கிறது. பர்குஸான் கொடுக்கவேண்டுமா, இண்டர்நாஷனல் கொடுக்கவேண்டுமா என்பது மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவாக இருக்கிறது.

[முற் பகல் 9-30]

திரு. அ. தேவேந்திரன் : தமிழ் நாட்டில் இருக்கும் விவசாயிகள் ஃபெர்கூசன் டிராக்டர்களும், இண்டர்நேஷனல் டிராக்டர்களுந்தான் விவசாய வேலைக்குச் சுலபமாக இருக்கின்றன என்று அவற்றை வாங்க விரும்புகிறார்கள். ஆகவே, தமிழ் நாட்டுக்கு இந்த வகை டிராக்டர்களைத்தான் ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கேட்டோம். ஃபெர்கூசன் டிராக்டர்கள் 35 வரை கேட்டதற்கு ஒன்றே ஒன்று மட்டும் ஒதுக்கினார்கள். இண்டர்நேஷனல் 12 வரை கேட்டோம். 1973–74-ல் ஒன்று கூட ஒதுக்கவில்லை. இது மத்திய அரசின் கையில் இருக்கிறது. நான் ஹரியானவைச் சுற்றிப் பார்க்கும்போது அங்கு ஃபெர்கூசன்கள் ஏராளமாகக் காணப்பட்டன. அது சென்னையில் உற்பத்தியாகிறது. ஹரியானவில் இவ்வளவு அதிகமாக ஃபெர்கூசன்கள் காணப்படுகின்றனவே என்று கேட்டதற்கு மத்திய அரசு ஹரியானவுக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

1973 டிசம்பர் 1]

திரு. ப. முத்துசாமி: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அக்ரோ இன்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் மூலமாக டிராக்டர்கள் சாங்ஷன் ஆகியும் கிடைக்காமல் இருக்கிறது. ஒதுக்கியிருக்கும் டிராக்டர்களில் இவற்றுக்கு முன்னுரிமை கொடுக்க அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: எஸ்கார்ட் டிராக்டர்கள் வேண்டுமானுல் உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

திரு. நா. வீராசாமி: ஹரியானுவுக்கு நிறைய ஃபெர்கூசன் டிராக்டர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்களே சொன்னுர்கள். மத்திய அரசாங்கம் பாரபட்சம் இல்லாமல் எல்லா மாநிலங்களுக்கும் இருக்கின்ற டிராக்டர்களைப் பங்கிட்டுக் கொடுப்பதில் நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: அதிகமாக ஃபெர்கூசன் டிராக்டர்கள், இன்டர்நேஷனல் டிராக்டர்கள் வேண்டுமென்று எழுதியிருக்கிருேம்.

திரு. ஆ. பரந்தாமன்: நமக்குத் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தைப் பார்த்தால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற டிராக்டர்கள் அதிகமாக இருக்கின்றன என்று தெரிகிறது. எதற்கெடுத்தாலும் வெளிநாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் உரத்திற்கு எப்படி தட்டுப்பாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிருேமோ அதே நிலைதான் எதிர்காலத்தில் இதற்கும் உருவாகும். இதை மனதில் வைத்து இன்டிஜினஸ் டிராக்டர்களை உருவாக்க திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இன்டிஜினஸ் டிராக்டர்கள் என்று கூறப்பட்டு இந்தியாவிலேயே உற்பத்தியாகிற டிராக்டர்கள் இருக்கின்றன. அவற்றை எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு ஒதுக்க வேண்டுமென்பதற்கு டிராக்டர் டிஸ்ட்ரிப்யூஷன் கன்ட்ரோல் ஆர்டர் என்று இருக்கிறது. அதன்படி ஒதுக்குகிறுர்கள். அப்படி ஒதுக்குகிறபோது நமக்கு வெளிநாட்டு எஸ்கார்ட், டி. 25 போன்ற டிராக்டர்கள்தான் வந்து சேருகின்றன. இன்டிஜினஸ் டிராக்டர்கள் இல்லாமல் இல்லை. சில இன்டிஜினஸ் டிராக்டர்கள் அண்மையில் கிடைத்திருக்கின்றன.

திரு. கே. எ. வகாப் : வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற சில டிராக்டர்கள் அளிக்கப்பட்டாலும் இங்கு உற்பத்தியாகின்ற ஃபெர்கூசன் டிராக்டர்கள் விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கின்றன. வெளிநாட்டு டிராக்டர்கள் ஜெர்மன் டிராக்டர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்தக் காரணங்களை எடுத்துக்காட்டி உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் வெளிநாட்டிலிருந்து நேரடியாக டிராக்டர்களை இறக்குமதி வரி இல்லாமல் இறக்குமதி செய்து கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது கூட மத்திய அரசாங்கத்தின் கொள்கை காரணமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது, வெகுவாக. சென்னையிலேயே உற்பத்தியாகும் ஃபெர்கூசன் டிராக்டர்களை சிம்சன் கம்பெனி தயார் செய்கிறார்கள். கோவையில் ஒரு கண்காட்சி வைத்திருந்தார்கள். அதைக் கொண்டு போய்க் காட்டினார்கள். மற்ற இடங்களை எல்லாம் பார்த்துவிட்டு ஃபெர்குசன் டிராக்டர் வைக்கிருக்கும் இடத்தில் கால் மிதிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். 'நீங்கள் ஃபெர்குசனை வேறு மாநிலங்களுக்கு அனுப்புகிறீர்கள் ; எங்களுக்குக் கொடுக்கவில்லை' என்று கூறி உள்ளே நுழையாதபடி வெளியிலேயே நின்றுவிட்டேன். அவ்வளவு தூரம் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக அல்லாமல் தனியார் மூலமாக இன்டர்நேஷனல், ஃபெர்குசன் டிராக்டர்கள் தமிழ்நாட்டில் விநியோகம் செய்யப்படுகிறதா ? அப்படியானால் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Diesel oil for pump sets

* 560 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for the Agriculture be pleased to state—

(a) whether the Agriculturists of Coimbatore District are required to obtain identity cards for purchase of diesel oil for their pump sets; and

(b) if so, the details thereof?